**<u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>**

**IN THE COURT OF XXXIV METROPOLITAN MAGISTRATE,**
**(FAST TRACK COURT NO. 1), EGMORE AT ALLIKULAM, CHENNAI**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | S.T.C.No. 5391/2021 | **CNR No.** | **:** | TNCH0F-046475-2021 |
| **Name** | **:** | Dilipkumar Bagmar | **Father's Name** | **:** | Sajanraj |
| **Witness for** | **:** | Complainant | **Calling** | **:** | PW1 |
| **Age** | **:** | 53 | **Area** | **:** | Purasaiwalkam |
| **Taluk** | **:** | --- | **District** | **:** | Chennai-600007 |
| **Start Time** | **:** | 12:00 | **End Time** | **:** | 13:14 Hrs |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 10.04.2026 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, XXXIV Metropolitan Magistrate, Fast Track Court- 1, Egmore at Allikulam, Chennai – 03.

Accused absent. Section 355 B.N.S.S. application filed and allowed. Accused counsel present.

**<u>எதிரித் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் நிதி நிறுவனம் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் என்ன வகையான தொழில் செய்கிறேன் என்றால் கடன் வழங்குகிறோம். எங்களது நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பணம் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்வதற்கு உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் வருமான வரி செலுத்துகிறோம் என்றால் சரிதான், வருமான வரி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு நேரடியாக பணம் கொடுத்து பைனான்ஸ் செய்துள்ளேனா என்றால் ஆமாம். அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி தாரஸ் லாரி வாங்க நிதியுதவிக்காகதான் எங்களை அனுகினார் என்றால் சரிதான். எதிரி நேரடியாக எங்களை அனுகவில்லை என்றும் எங்களது முகவர் மூலம் தான் அனுகினார் என்றால் சரிதான். நான் நேரடியாக எதிரிக்கு பணம் வழங்கவில்லை என்றும் எங்களது முகவர் மூலம் தான் பணம் வழங்கினோம் என்றால் சரிதான். எனது முகவருக்கு பணம் அனுப்பியதைக் காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் வாகனமான டாரஸ் லாரி எங்களுக்கு சொந்தமானதா என்றால் இல்லை. லாரி யாருக்கு சொந்தமானது என்றால் ஞாபகமில்லை, வாகனங்களை வாங்கி விற்பனை

செய்யும் எங்களது முகவர் சுப்புராம் என்பவருக்குதான் பணம் அனுப்பப்பட்டது. பணம் அனுப்புவதற்கு முன்பு லாரி வாகனத்தில் ஆவணங்களை பார்த்தேனா என்றால் RC பார்த்தேன். அதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். பணம் கொடுத்த முகவரை இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. பு.சா.ஆ.1 Hire Purchase Agreement என்றால் சரிதான். இதில் Signature of Hirer என்ற இடத்தில் M. Selvarani என கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். Guarantor என்ற இடத்தில் யார் கையொப்பம் செய்துள்ளார் என்றால் ஞாபகமில்லை. பிணையதாரருக்கு சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றும் இந்த வழக்கில் அவரை சேர்க்கவில்லை என்றால் சரிதான். பு.சா.ஆ.1 ஆவணத்தின் படி 2012 வாகனத்தை 2019 ல் பைனான்ஸ் செய்ததாக உள்ளது என்றால் சரிதான், 2012 மாடல் ஆகும். எனது வழக்கில் 7 வருட பழைய வண்டியை எதிரிக்கு விற்பனை செய்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான், நான் விற்பனை செய்யவில்லை, அவரிடமிருந்து எதிரிதான் வாங்கியுள்ளார். இந்த வண்டியை பைனான்ஸ் செய்வதற்கு முன்பு அது ஓடும் நிலையில் உள்ளதா என்று சரிபார்த்தேனா என்றால் பார்த்தேன், வண்டியின் Fitness Certificate ஐ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஓடாத மற்றும் Fitness Certificate இல்லாத வாகனத்திற்கு நான் பைனான்ஸ் செய்துள்ளேன் என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்தேன். எனக்கு வண்டி ஓடும் நிலையில் என்று பின்னர் தெரியவந்ததா என்றால் சில பழுதுகள் உள்ளது என்று தெரியவந்தது. பணம் வழங்கும் பொழுது வாகனம் பழுதடைந்து நிற்க வைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஓடாத வண்டிக்கு புது வண்டியின் விலை போன்று நான் அதிகப்படியான தொகைக்கு ஒப்பந்தம் கொடுத்துள்ளேன் என்றால் விலையை நிர்ணயம் செய்தது எதிரியும் விற்பனை செய்தவரும் ஆவார்கள். வாகனம் எந்த தேதியில் எதிரிக்கு கொடுக்கப்பட்டது 01.10.2019 ஆகும். வாகனம் கொடுத்ததற்கு ஆதரவாக Delivery Challan அல்லது Gate Pass தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வண்டியை அசல் ஆவணங்கள் எதிரியிடம் வழங்கப்பட்டதா என்றால் இல்லை, பெயர் மாற்றம் செய்யப்படுவதற்காக என்னிடம் உள்ளது. பொதுவாக பெயர் மாற்றம் எத்தனை நாட்கள் செய்வோம் என்றால் 1 மாதம் ஆகும். 1 மாதம் பிறகு பெயர் மாற்றம் கோரி எதிரியோ அல்லது நாங்களோ ஏதாவது கடிதம் அனுப்பியுள்ளோமா என்றால் இல்லை, தொலைபேசி மூலம்

தொடர்பு கொண்டோம். அதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**எதிரித் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-G.Amar Anand

XXXIV Metropolitan Magistrate
(Fast Track Court -1)
Egmore at Allikulam, Chennai-03